# General Science Model Test Questions 34 in Tamil [Chemistry - 12]

1. பின்வரும் நைட்ரஜன் உரங்களில் எது உயர் நைட்ரஜன் விழுக்காடு கொண்டது?

(A) Ca $CN_2$ **(B) யூரியா** (C) $NH_4NO_3$ (D) $(NH_4)_2$ $SO_4$

2. பொதி பின்னம் = ------------------

(A) நிறை எண் / நிறை குறை (B) நிறை குறை x நிறை எண்

**(C) நிறை குறை / நிறை எண்** (D) 1 / நிறை குறை x நிறை எண்

3. விலை உயர்ந்த ரூபி கற்கள் ------------ ஆல் ஆனவை

(A) அலுமினியம் சிலிக்கேட் (B) சோடியம் அலுமினியம் சிலிக்கேட்

(C) சோடியம் சிலிக்கேட் **(D) அலுமினா**

4. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணைகள் யாது?

I. குளோரோபுளோரோ கார்பன் - குளிர்சாதனப் பெட்டி

II. மீத்தேன் - பண்ணை மண்ணை உழுதல்

III. நைட்ரஸ் ஆக்ஸைடு – கால்நடைகளில் செரித்தல்

IV. கார்பன்டை ஆக்ஸைடு - புதை படிவ எரிபொருட்களை எரித்தல்

(A) I மற்றும் II **(B) II மற்றும் III** (C) III மற்றும் IV (D) I மற்றும் IV

5. தவறான ஜோடியை கண்டறிக

I. சலவை சோடா – $Na_2CO_3$

II. சலவைத்தூள் - CaO

III. பாரீஸ் சாந்து – Ca $SO_4 \frac{1}{2} H_2O$

IV. சமையல் சோடா – $NaHCO_3$

(A) I **(B) II** (C) III (D) IV

6. தீக்குச்சியில் உள்ள வேதிப்பொருட்கள் யாவை?

(A) சிவப்பு பாஸ்பரஸ், வச்சிரம், கந்தகம்

**(B) ஆண்டிமணி சல்பைடு, கந்தகம், பொட்டாசியம் குளோரேட்**

(C) ஆண்டிமணி சல்பைடு, சிவப்பு பாஸ்பரஸ், வச்சிரம்

(D) ஆண்டிமணி சல்பைடு, பாஸ்பரஸ், கந்தகம்

7. நேர் தாம்சன் விளைவு உடைய உலோகம்

(A) Pt **(B) Ag** (C) Ni (D) Hg

8. $Fe(OH)_3$ கூழ்மத்தின் நிறம்

(A) மஞ்சள் (B) மஞ்சள் ஆரஞ்சு **(C) சிகப்பு** (D) கருமை

9. துத்தநாகத்தின் வெளியேற்று ஆற்றல் $6.8 \times 10^{-19}$ J துத்தநாகத்திலிருந்து எலக்ட்ரான் வெளியேற்றத் தேவையான பயன் தொடக்க அதிர்வெண் யாது?

(A) $1.206 \times 10^{15}$ Hz **(B) $1.026 \times 10^{15}$ Hz** (C) $1.0026 \times 10^{15}$ Hz (D) $1.026 \times 10^{15}$ Hz

10. $N^{13}$ ன் அரை ஆயுட்காலம் 10.1 நிமிடங்கள் அதன் ஆயுட்காலம்

(A) 5.2 நிமிடங்கள் (B) 10.1 நிமிடங்கள் (C) 20.2 நிமிடங்கள் **(D) முடிவிலி**

11.

$$C_6H_5OH + (CH_3)_2SO_4 \xrightarrow{NaOH} X + Y$$

X மற்றும் Y முறையே

(A) மெதில் ஆல்கஹால் + ∴பினடோல்
(B) ஈதேன் + பென்சீன்
(C) அனிசோல் + எத்தில் ஹைட்ரஜன் சல்பேட்
**(D) அனிசோல் + மெத்தில் ஹைட்ரஜன் சல்பேட்**

12. கீழ்க்கண்டவற்றுள் எது மயக்கமூட்டியாகச் செயல்படுகிறது?

(A) டை-மெதில் ஈதர் **(B) டை-எத்தில் ஈதர்**

(C) டை-பினைல் ஈதர் (D) அனிசோல்

13. பின்வரும் கரிமச் சேர்மங்களில் எந்தத சேர்மத்தில் ஆல்டால் குறுக்க வினை நடைபெறாது?

(A) அசிட்டால்டிஹைடு (B) அசிட்டோன்

**(C) பென்சோபினோன்** (D) எதில் ஆல்கஹால்

14. எந்த சேர்மம் ஹேலோ பார்ம் வினைக்கு உட்படாது?

(A) எத்தில் ஆல்கஹால் **(B) மெத்தில் ஆல்கஹால்**

(C) ஐசோ-புரப்பைல் ஆல்கஹால் (D) அசிட்டோன்

15. பின்வருவனவற்றுள் டைக்குளோரோ பென்சீனின் மூன்று மாற்றியங்களின் இருமுனைத் திருப்பு திறன்களின் சரியான வரிசை எது?

(A) ஆர்த்தோ மாற்றியம் < மெட்டா மாற்றியம் < பாரா மாற்றியம்



winmeen.com

**(B) ஆர்த்தோ மாற்றியம் > மெட்டா மாற்றியம் > பாரா மாற்றியம்**

(C) பாரா மாற்றியம் < ஆர்த்தோ மாற்றியம் < மெட்டா மாற்றியம்

(D) மெட்டா மாற்றியம் > ஆர்த்தோ மாற்றியம் > பாரா மாற்றியம்

16. ஃப்யூமரிக் அமிலம் மற்றும் மெலியின் அமிலம் ஆகியவை

(A) ஒளிச் சுழற்சி மாற்றியங்கள் (B) வச அமைப்பு மாற்றியங்கள்

**(C) வடிவ மாற்றியங்கள்** (D) ஆர்த்தோ மற்றும் பாரா மாற்றியங்கள்

17. கரியிலிருந்து பெர்ஜியஸ் முறையில் பெட்ரோலை தொகுப்பு முறையில் தயாரித்தலில் பயன்படுத்தப்படும் வினைவேக மாற்றி

(A) $CuCl_2$ (B) $Cr_2O_3$ (C) $V_2O_5$ **(D) $Fe_2O_3$**

18. கரைப்பான் எதிர் கூழ்மத்திற்கு எடுத்துக்காட்டு

**(A) நீரில் சல்ஃபர்** (B) ஜெலாட்டின் (C) புரோட்டீன் (D) ஸ்டார்ச்

19. புரோமோ பென்சீனை புரோமினேற்றம் செய்யும் வினை எந்த வகை சிக்கலான வினை?

(A) தொடர் வினை **(B) பக்க வினை** (C) மீள்வினை (D) சங்கிலி வினை

20. பின்வரும் வினையின் Δ H மற்றும் Δ S மதிப்புகளின் குறிகள் முறையே $cl_{2(g)} \rightarrow 2\ cl_{(g)}$

(A) - , - (B) - , + **(C) + , +** (D) + , -

21. ஹேபர் முறையில் உருவான அம்மோனியாவை நீக்க நீராவி அனுப்பப்படுவதன் நோக்கம்

(A) அழுத்தத்தை நிலைப்படுத்த (B) வெப்பநிலையை நிலைப்படுத்த

(C) சமநிலையை நிலைப்படுத்த **(D) அதிகபட்ச அம்மோனியா உருவாக்க**

22. $2SO_{2(g)} + O_{2(g)} \leftrightarrows 2SO_{3(g)}$ என்ற சமநிலை வினையில் $K_p$ க்கும் $K_c$ க்கும் உள்ள தொடர்பு

(A) $K_p = K_c \times RT$ (B) $K_p = K_c \times (RT)^2$ **(C) $K_p \times RT = K_c$** (D) $K_p = K_c \times (RT)^{-2}$

23. எதிர்க்குறி தாம்சன் விளைவு உடைய உலோகம்

(A) Ag **(B) Hg** (C) Sn (D) Sb

24. $_{92}U^{235} + {}_0n^1 \rightarrow {}_{56}Ba^{141} + {}_{36}Kr^{92} + {}_{30}n^1 + 200Mev$ என்ற வினை ஒரு

**(A) உட்கரு பிளப்பு வினை** (B) உட்கரு பிணைப்பு வினை

(C) பலசிறு சிதைவுறு வினை (D) சமநிலை வினை

25. ஆய்வுக் குழல் புனல் ஆய்வில் பயன்படுத்தப்படும் உப்பு

(A) பொட்டாசியம் குளோரைடு **(B) சோடியம் பை கார்பனேட்**

(C) சோடியம் கார்பனேட் (D) சோடியம் குளோரைடு

26. கீழ்கண்டவற்றுள் தோல் நோயைக் குணப்படுத்தும் களிம்புகளில் எது பயன்படுகிறது?

(A) $AgNO_3$ (B) AgBr **(C) $ZnCO_3$** (D) AgCl

27. $Br_2$ மூலக்கூறின் பிணைப்பு நீளம் எது?

(A) 1.54 **(B) 2.28** (C) 0.74 (D) 1.44

28. அயனியாக்கும் ஆற்றலின் வரிசை

(A) $s < p < d < f$ **(B) $s > p > d > f$** (C) $s > d > p > f$ (D) $s < d < p < f$

29. மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்பைக் கொண்ட சேர்மம்

**(A) சாலிசிலிக் அமிலம்** (B) நீர்

(C) M – நைட்ரோபீனால் (D) P-நைட்ரோபீனால்

30. கீழ்க்கண்டவற்றுள் எது ஆக்சோ நேரயனியை உருவாக்குகிறது?

(A) லாந்தனைடுகள் **(B) ஆக்டினைடுகள்** (C) மந்த வாயுக்கள் (D) உப்பீனிகள்

31. சுவாசித்தல் நிகழ்ச்சியை கேனாங்கின் சுவாசமானி மூலம் எவ்வாறு அறிவாய்?

(A) $CO_2$ வெளியேறும் (B) நீர் மட்டம் உயரும்

**(C) KOH மட்டம் உயரும்** (D) $O_2$ வெளியேறும்

32. தொடுமுறையில் $SO_2$ மற்றும் $O_2$ க்கும் இடையே உள்ள மோல் விகிதம்

(A) 1 : 2 **(B) 2 : 1** (C) 3 : 1 (D) 1 : 3

33. கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானவை எவை?

I. அணுக்கரு உலையின் தத்துவம் கட்டுப்பாடற்ற அணுக்கரு பிளவு வினை ஆகும்

II. அணுகுண்டின் தத்துவம் கட்டுப்பாடற்ற அணுக்கரு இணைவு வினை ஆகும்

III. ஹைட்ரஜன் குண்டானது அணுக்கரு இணைவு வினைக்கு எடுத்துக்காட்டு ஆகும்

**(A) I மற்றும் II** (B) II மற்றும் III (C) I மற்றும் III (D) I, II மற்றும் III

34. $\alpha$ சிதைவின் போது சேய் தனிமத்தில் ஏற்படும் மாற்றம்

(A) அணு எண் ஒன்று குறையும்

(B) நிறை எண் நான்கு அதிகரிக்கும்

(C) புரோட்டான் எண்ணிக்கை மாறுபடாது

**(D) நியூட்ரான் எண்ணிக்கை இரண்டு குறையும்**

35. சோடியம் பென்சோயேட் மற்றும் பொட்டாசியம் மெட்டா பைசல்பேட் ஆகியன ------- ஆகப் பயன்படுகின்றன.

(A) செயற்கை இனிப்புச் சுவையூட்டியாக **(B) உணவுப் பொருளை பாதுகாக்க**

(C) நுண்ணுயிர் எதிரியாக (D) சாயமாக

36. ஒரு கரைசலில் D (+)குளுக்கோகம் D (-) குளுக்கோசும் சம அளவில் இருந்தால் அக்கரைசலின் பெயர் என்ன?

(A) திராட்சை சர்க்கரை (B) கரும்புச் சர்க்கரை

**(C) எதிர்சுழற்சி சர்க்கரை** (D) ஒடுக்கும் தன்மையற்ற சர்க்கரை

37. இரு மூலக்கூறு அனிலினை கார்பன்டை சல்பைடுடன் வினைபுரிய செய்யும் போது தோன்றும் விளைபொருள் யாது?

**(A) S – டைபினைல் தயோ யூரியா** (B) S – பினைல் தயோ யூரியா

(C) S – டிரைபினைல் தயோ யூரியா (D) S – டைபினைல் யூரியா

38. கிரினார்டு காரணி எதனுடன் வினைபுரிந்து கார்பாக்சலிக் அமிலத்தை தருகிறது?

(A) ∴பார்மால்டிஹைடு (B) அசிட்டால்டிஹைடு

(C) அசிட்டோன் **(D) கார்பன்டை ஆக்ஸைடு**

39. வின்டர்கிரீன் எண்ணெயில் உள்ளது

(A) மெத்தில் அசிட்டேட் (B) மெத்தில் ∴பார்மேட்

**(C) மெத்தில் சாலசிலேட்** (D) அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்

40. பீனால் பார்மால்டிஹைடுடன் வினைபட்டு -----------ஐத் தருகிறது

**(A) பேக்கலைட்** (B) மேலகைட் பச்சை

(C) மலோனிக் அமிலம் (D) டிங்க்சர் பென்சாயின்

41.


எதில் α - ஹைட்ரஜன் இல்லை?

A) $CH_3CH_2OH$

B) $CH_3-CH(CH_3)-OH$

C) $CH_3-CH(CH_3)-CH_2OH$

D) $CH_3-C(CH_3)_2-OH$

42. கிளிசராலை, பிஸ்மத் நைட்ரேட் உடன் ஆக்ஸிஜனேற்றம் செய்யும்போது உண்டாவது

(A) கிளிசரிக் அமிலம் (B) கிளிசரால்டிஹைடு

**(C) மீசோ ஆக்ஸாலிக் அமிலம்** (D) ஆக்ஸாலிக் அமிலம்

43. பின்வருவனவற்றுள் தன்னிச்சையாக நிகழாத வினை எது?

(A) $Zn_2 + H_2SO_2 \rightarrow ZnSO_4 + H_2$ (B) $Cu^{2} + H_2 \rightarrow Cu + SH^{+}$

**(C) $Cu + H_2SO_4 \rightarrow CuSO_4 + H_2$** (D) $Zn + CuSO_4 \rightarrow ZnSO_4 + Cu$

44. 298 K வெப்பநிலையில் நீரின் அயனிப்பெருக்க மதிப்பு --------------- ஆகும்

(A) $K_w = 1 \times 10^{7}$ மோல்$^{2}$ டெ.மீ$^{-6}$ (B) $K_w = 1 \times 10^{-7}$ மோல்$^{2}$ டெ.மீ$^{-6}$

(C) $K_w = 1 \times 10^{14}$ மோல்$^{2}$ டெ.மீ$^{-6}$ **(D) $K_w = 1 \times 10^{-14}$ மோல்$^{2}$ டெ.மீ$^{-6}$**

45. டிண்டால் விளைவு என்பது கூழ்மங்களின் ---------- பண்பாகும்

(A) இயக்கவியற் பண்பு (B) மின்னாற் பண்பு

(C) வேதியியற் பண்பு **(D) ஒளியியல் பண்பு**

46. ஒரு வேதிவினையின் வினைவேக மாறிலியின் அலகைக் கணக்கிடப் பயன்படும் சமன்பாடு

(A) $Mol^{(1-n)}\ lit^{(n-1)}\ Sec^{-2}$ (B) $Lit^{(1-n)}\ Mol^{(n-1)}\ Sec^{-1}$

(C) $Mol^{(1-n)}\ lit^{(n-1)}\ Sec^{2}$ **(D) $Lit^{(n-1)}\ Mol^{(1-n)}\ Sec^{-1}$**

47. அணைவு எண் நான்கு கொண்ட சேர்மத்திற்கான சான்று

(A) $K_4[Fe(CN)_6]$ (B) $[Co(en)_3]Cl_3$ (C) $[Fe(H_2O)_6]Cl_3$ **(D) $[Cu(NH_3)_4]Cl_2$**

48. மைய உலோக அயனி அடிப்படையில் கீழ்க்கண்ட எந்த கூற்று சரி?

(A) எலக்ட்ரானை ஏற்கும் **(B) இணை எலக்ட்ரானை ஏற்கும்**

(C) எலக்ட்ரானை வழங்கும் (D) இணை எலக்ட்ரானை வழங்கும்

49. தேவையில்லா குறுகட்டிகளுக்கு எதிர் மருந்தாக எந்த அணைவு சேர்மம் பயன்படுகிறது?

**(A) சிஸ் - $[Pt(NH_3)_2Cl_2]$** (B) டிரான்ஸ் - $[Pt(NH_3)_2Cl_2]$

(C) சிஸ் - $[Pd(NH_3)_2(NO_2)_2]$ (D) டிரான்ஸ் - $[Pd(NH_3)_2(NO_2)_2]$

50. கீழ்க்கண்டவற்றுள் குறை உலோக முறைபாடிற்கான எடுத்துக்காட்டு யாது?

(A) NaCl (B) AgCl (C) CsCl **(D) FeS**

51. இடைநிலைத் தனிமங்களின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பை தேர்ந்தெடு

(A) $(n-1)d^{0-10}ns^{1-2}$ **(B) $(n-1)d^{1-10}ns^{1-2}$** (C) $(n-1)d^{1-5}ns^{2}$ (D) $(n-1)d^{0}ns^{1}$

52. $K_2Cr_2O_7$ ஐ பொறுத்தமட்டில் தவறான கூற்றுரையை தேர்வு செய்து எழுதுக

(A) இது ஒரு சிறந்த ஆக்ஸிஜனேற்றம் கரணி

(B) இது தோல் பதனிடும் தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகிறது

(C) இது நீரில் கரையக்கூடியது

**(D) இது ∴பெரிக் சல்பேட்டை ∴பெரஸ் சல்போட்டாக குறைக்கிறது**

53. கீழ்க்கண்டவற்றை பொருத்துக:

| உலோகக்கலவை | இயைபு |
|---|---|
| (a) வெண்கலம் | 1. Cu=87, Sn=10, Zn=3 |
| (b) பித்தளை | 2. Cu=75-90, Sn=10-25 |
| (c) நைக்ரோம் | 3. Cu=60-80, Zn=20-40 |
| (d) துப்பாக்கி உலோகம் | 4. Cr=15, Ni=60, Fe=25 |

Codes:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **2** | **3** | **4** | **1** |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

54. $PCl_5$ ன் வடிவம் யாது?

(A) பிரமிடு **(B) முக்கோண இருபிரமிடு**

(C) நேர்கோட்டு வடிவம் (D) நான்முகி

55. P ஆர்பிட்டால்களின் வடிவம் என்ன?

(A) கோள வடிவம் (B) குளோவர் இலை **(C) டம்பல் வடிவம்** (D)(B) அல்லது (C)

56. கூற்று (A) : மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்புகள் ஒரே அல்லது வேறுபட்ட சேர்மங்களின் இரண்டு மூலக்கூறுக்கிடையே உருவாகிறது

காரணம் (R) : ஐந்து அல்லது ஆறு அணுக்கள் கொண்ட வளையச் சேர்மங்களில் இப்பிணைப்பு உருவாகிறது

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

**(C) (A) என்பது சரி, ஆனால் (R) என்பது தவறு**

(D) (A) என்பது தவறு ஆனால் (R) என்பது சரியே

57. சூரிய செல்களில் எந்த வேதிப்பொருள் பயன்படுத்தப்படுகிறது?

(A) கால்சியம் **(B) காட்மியம்** (C) பொட்டாசியம் (D) சோடியம்

58. நைட்ரஸ் ஆக்ஸைடு, கார்பன்-டை-ஆக்ஸைடை விட எத்தனை மடங்கு அதிக வெப்பத்தை உறிஞ்சும்?

(A) 20 மடங்கு **(B) 300 மடங்கு** (C) 500 மடங்கு (D) 50 மடங்கு

59. ஒரு குறிப்பிட்ட எடை அலகுக்கு ஹைட்ரஜன் எரிநிலையால் கிடைக்கும் வெப்பம் ஹைட்ரோ கார்பனை விட எத்தனை மடங்கு அதிகம்?

**(A) 2.5 மடங்கு** (B) 3.5 மடங்கு (C) 4.5 மடங்கு (D) 1.5 மடங்கு

60. டெப்லான் என்பதன் வேதிப்பெயர்

(A) பாலி புரோப்பிலீன் (B) பாலி அசிட்டிலீன்

**(C) பாலி டெட்ராபுளூரோ எத்திலீன்** (D) பாலிவினைல் ஆல்கஹால்

61. பின்னோக்கு பிணைப்பை உண்டாக்கும் சேர்மங்கள்

(A) உலோக நைட்ரேட்டுகள் (B) உலோக கார்பனேட்டுகள்

**(C) உலோக கார்பனைல்கள்** (D) உலோக ஆக்சைடுகள்

62. இயற்கையில் ஓசோன் படலம் உருவாகக் காரணம்

(A) CFC ஆக்சிஜனுடன் இடையீடு அடைவதால்

(B) UV கதிர்கள் ஆக்சிஜனுடன் இடையீடு அடைவதால்

(C) IR கதிர்கள் ஆக்சிஜனுடன் இடையீடு அடைவதால்

(D) ஆக்சிஜன் நீராவியுடன் இடையீடு அடைவதால்

63. மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பைப் பெற்றுள்ள சேர்மம்

(A) O – நைட்ரோ பீனால் **(B) நீர்**

(C) சாலிசிலிக் அமிலம் (D) சாலிசிலால்டிஹைடு

64. பனிப்புகை என்பது

(A) நீர்மத்தில் வாயு உள்ள கூழ்மம் **(B) வாயுவில் நீர்மம் உள்ள கூழ்மம்**

(C) திண்மத்தில் வாயு உள்ள கூழ்மம் (D) வாயுவில் திண்மம் உள்ள கூழ்மம்

65. அனிலினை புகையும் கந்தக அமிலத்துடன் 353 K வெப்பப்படுத்தும்போது உருவாகும் சேர்மம்

**(A) p – அமினோ பென்சீன் சல்.:.போனிக் அமிலம்**

(B) o – அமினோ பென்சீன் சல்.:.போனிக் அமிலம்

(C) m – அமினோ பென்சீன் சல்.:.போனிக் அமிலம்

(D) p – நைட்ரோ பென்சீன் சல்.:.போனிக் அமிலம்

66. தவறான வாக்கியத்தை தேர்ந்தெடு

I. ஓசோன் இழப்பினால் விளைச்சல் பாதிக்கும்

II. ஓசோன் இழப்பு மீன் குஞ்சுகளில் எந்த பாதிப்பும் ஏற்படாது

III. ஓசோன் இழப்பால் மனிதனுக்கு தோல் புற்றுநோய் ஏற்படும்

**(A) II மட்டும்** (B) I மட்டும் (C) III மட்டும் (D) I, II, III மூன்றும் தவறு

winmeen.com